# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 05 திங்கட்கிழமை 21.07.2025 கதிர் 261



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
Yarl Muttram
Youtube Channel




## நிலந்த ஜயவர்தனவுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாடு இல்லை



### அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு மரணதண்டனை வழங்க வேண்டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாடு இல்லை.” - என்று கொழும்பு மறை மாவட்டத்துக்கான தகவல் தொடர் இயக்குநர் அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் மக்கள் தொடர்பு இயக்குநர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்னாண்டோ கொழும்பில் நேற்று நடந்த ஊடக

7

# அரசின் பயணம் தவறெனில் மக்கள் பொங்கியெழுவார்கள்



### மைத்திரி கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

“தேசிய மக்கள் சக்தி அரசின் பயணம் தவறெனில், அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள்.” - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களே கடந்துள்ளன. எனவே, அரசின் பயணம் சரியா அல்லது தவறா என்பதை ஒன்றரை வருடங்கள் சென்ற பின்னரே அறியக்கூடியதாக -உணரக்கூடியதாக இருக்கும்.

பயணம் சரியெனில் மக்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்கள். தவறான பயணமெனில் மக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

7

## கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று




யாழ்ப்பாணம், ஜூலை 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும்

7

## வாவியில் மூழ்கி இருவர் மரணம்!



இரத்தினபுரி, ஜூலை 21

வாவியில் மூழ்கி இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டம், உடவளவையில் உள்ள பனாக்கடுவ வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

7

## இரு பஸ்கள் கோர விபத்து



### 25 பேர் வைத்தியசாலையில்

கேகாலை, ஜூலை 21

கேகாலையில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

7

## ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்திய இளைஞர் பலி



யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த 26

7

# யாழ். வட்டுக்கோட்டை பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் மோதல்!

கொழும்பு, ஜூலை 21

யாழ். வட்டுக்கோட்டை பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில்ஏற்பட்ட மோதலை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மூளாய் பகுதியில் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் வரையில் சென்று, தீர்த்து வைக்கப்பட்டது.

இந்தநிலையில் இரு நபர்களின் பிரச்சனை மீண்டும் நேற்றையதினம் தலை தூக்கவே, அது அப்பகுதியை சேர்ந்தவர்களின் பிரச்சனையாக மாறி இரு தரப்பினரும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மோதலில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதுடன், மற்றுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டது.

குறித்த மோதல் விவகாரம் தொடர்பில் அறிந்த வட்டுக்கோட்டை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்தனர்.

இதன்போது பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அப்பகுதியில் குழுமி இருந்தவர்களை துரத்தினர்.

குறித்த மோதல் விவகாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆடி அமாவாசை திருவிழாவில் 500 மாணவர்கள்



திருக்கோவில், ஜூலை 21

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை திருவிழாவில் ஒரே தடவையில் 500 மாணவர்கள் கலந்துகொண்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமாரின் ஒழுங்கமைப்பில் சங்கீத ஆசிரியர்களின் பெரும் ஏற்பாட்டில் இந்த ஐந்நூறு மாணவர்கள் கலந்துகொண்டனர்.

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியின் மனம் குளிர அவர்கள் கந்தசஷ்டி கவசம் மற்றும் திருப்புகழ் பாராயணம் செய்து வரலாற்றுச் சாதனை புரிந்தார்கள். ஆலயக் குருவும் அருளுரை வழங்கினார். தினமும் அங்கு பகல் இரவு திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 24 ஆம் தேதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.



# புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு

கொழும்பு, ஜுலை 21

2026 முதல் செயல்படுத்தப்பட உள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து சமூகத்தில் தற்போது பல்வேறு கருத்துகள் பகிரப்பட்டு வரும் நிலையில், இதற்கு ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் தங்களது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய 10 மற்றும் 11 ஆம் தரங்களில் கட்டாயப் பாடங்களிலிருந்து வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டு, அவை தெரிவு செய்யப்படும் பாடப் பட்டியலில் சேர்ப்பதற்கே இவ்வாறு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. சாதாரண தரத்தில் வரலாறு கட்டாயப் பாடமாக இருப்பது அவசியம் என்று அஸ்கிரிய பீடத்தின் பிரதிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் மற்றும் தென்னிலங்கை பிரதம சங்கநாயக கலாநிதி ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, வரலாறு மற்றும் தொல்பொருள் பாடங்களை பாடசாலைக் கல்வி முறையில் கட்டாயப் பாடங்களாகப் பேண வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுடன் கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடலை மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலையில், வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் தேரர்கள் குழுவொன்று, இன்று அஸ்கிரிய மகாநாயக்க தேரரைச் சந்தித்து குறித்த பாடப் பிரச்சினை குறித்து கலந்துரையாடி உள்ளனர். (ஐ)

## சபாத் இல்லத்தை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜுலை 21

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் நாட்டவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் சபாத் இல்லத்தை உடனடியாக மூட நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கோரி கண்டன ஆர்ப்பாட்டமொன்று அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களால் திங்கட்கிழமை அன்று பிரதேச சபை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முதலாவது கன்னி அமர்வு திங்கட்கிழமை (21) அன்று தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்றது. இவ்விடயம் தொடர்பில் சகல உறுப்பினர்களாலும் பேசப்பட்டதுடன் அது தொடர்பான கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு சபை முடிவில் கண்டன ஆர்ப்பாட்டமும் செய்வதன்றும் முடிவு செய்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலில் வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்க திட்டம்!



கொழும்பு, ஜுலை 21

அடுத்த 03 - 04 ஆண்டுகளில் நாட்டில் எந்த தேர்தலும் இடம்பெறமாட்டாது என தேர்தல் ஆணையர் ஜெனரல் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2026 தொடக்கம் 2029 காலகட்டத்திற்கான தேர்தல் ஆணையத்தின் மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் குருநாகல் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்றது.

குருநாகலில் உள்ள கட்சிக் குழுக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்களிப்பதை கட்டாயமாக்கவும், வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணையர் ஜெனரல் சுட்டிக்காட்டியிருந்தார்.

நாட்டில் ஒவ்வொரு தேர்தலுக்கும் ஏற்படும் பெரும் செலவைக் கருத்தில் கொண்டு, தேர்தலில் அதிகபட்ச முடிவுகளை அடைவதே இந்த முடிவை எடுத்ததற்கான காரணம் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, எதிர்காலத்தில் தேர்தலுக்காக வைப்புத் தொகையை அதிகரிக்க முடியும் என நம்புவதாகவும் தேர்தல் ஆணையர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெவோனை சுற்றியுள்ள பகுதிகள் பகலில் இருண்டன

கொழும்பு, ஜுலை 21

ஹட்டனில் இருந்து தலவாக்கலை சென்க்ளேர் வரை பொருத்தப்பட்டுள்ள 33,000 வாட் உயர் மின்னழுத்த மின் கம்பியின் மீது யூ கெலிப்ஸ்டிக் மரமொன்று விழுந்ததில் குறித்த மின் கம்பியில் பலத்த சேதம் ஏற்பட்டு , பல பகுதிகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் மின்சார வாடிக்கையாளர் சேவை மையத்தின் மேற்பார்வையாளர் நிமல் சமரகோன் தெரிவித்தார்.

மத்திய மலைப்பகுதியில் இந்த நாட்களில் நிலவும் மோசமான வானிலை காரணமாக திங்கட்கிழமை இரவு மரம் விழுந்துள்ளதாகவும், தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக விழுந்த மரத்தை வெட்டி அகற்றி மின்சாரத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள் தடைபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி உட்பட டெவோன் பகுதியில் உள்ள நுகர்வோருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக நிமல் சமரகோன் மேலும் கூறினார். (ஐ)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவம்- விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை!



நல்லூர், ஜுலை 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்திர மகோற்சவம் இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், திருவிழா காலத்தில் ஆலயத்தின் பின்புறமாகவுள்ள பருத்தித்துறை வீதியை திறந்து விடுமாறு யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

யாழ். மாநகர முதல்வர், யாழ் மாநகர சபை ஆணையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டது.

அதன்படி,

ஜ/லை 27ஆம் திகதி நள்ளிரவில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ்.நகரை அடைய முடியும்.

ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும்.

அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும் செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதித் தடைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோல மாநகர சபையினால் வாகன அனுமதி அட்டை வழங்கப்படும். நிரந்தர தற்காலிக வியாபாரிகளுக்கு பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆலய வெளிவீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

உற்சவ காலங்களில் ஆலய சூழலில் பக்தி கீதங்களை மாத்திரமே ஒலிபரப்பு செய்யமுடியும். உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுளின் உருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்தல், வானூர்தியை பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வானவேடிக்கை நிகழ்வுகளை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் ஆலய வெளிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரல் 2026 முதல் ஈ-என்ஐசி அறிமுகம்

கொழும்பு, ஜுலை 21

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் (இ-என்ஐசி) ஏப்ரல் 2026க்குள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று டிஜிட்டல் பொருளாதாரத் துணை அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

டிஜிட்டல் ஐடி அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு, ஐடி செயல்முறையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் 2012 இல் தொடங்கப்பட்டதாக அவர் கூறினார்.

பிளாஸ்டிக் அடையாள அட்டைகளின் தற்போதைய பயன்பாடு சுற்றுச்சூழல் அமைப்பை எதிர்மறையாக பாதிக்கிறது என்பதை வீரரத்ன எடுத்துரைத்தார், மேலும் டிஜிட்டல் அடையாள தளத்திற்கு மாற வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிட்டார்.

இந்த அமைப்பு ஆழுளஜீ செயல்படுத்தல் தீர்வு மூலம் இலங்கையின் ஐடி பதிவு செயல்முறையைத் தனிப்பயனாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், டிஜிட்டல் ஐடி இப்போது வேகமாக உருவாகி வருவதாலும், பாதுகாப்பான மற்றும் திறமையான ஐடி தளத்தை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாலும், மாடுலர் ஓப்பன் சோர்ஸ் ஐடென்டிட்டி பிளாட்ஃபார்ம் (MOSIP) போன்ற ஒரு அமைப்பு அவசியம். (ஐ)

# பாமக எம்எல்ஏக்கள் 3 பேரை நீக்கி கட்சி அதிகாரத்தை முழுமையாக கையில் எடுத்த ராமதாஸ்: அன்புமணி ஆதரவு 2ம் மட்ட தலைவர்களும் கலக்கம்



பாமகவில் நிறுவனர் ராமதாசுக்கும், அன்புமணிக்கும் இடையே கருத்து மோதல் நீடித்து வருகிறது. இதுதொடர்பாக அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு எட்டப்படாத நிலையில் இருவரும் கட்சி நிர்வாகிகளை நீக்கி, புதிய நிர்வாகிகளை நியமித்து வருகின்றனர். 2026 ஜுன்வரை அன்புமணியை தலைவராக தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கும் என ஆதரவாளர்கள் கூறிவரும் நிலையில், கட்சியின் ஏ-பார்ம், பி-பார்மில் கையெழுத்திடும் அதிகாரம் ராமதாசுக்கு மட்டுமே இருப்பதாக தைலாபுரம் வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன. இதனால் பாமக இரண்டாக பிளவுபடும் சூழல் நிலவுகிறது.

இதனிடையே நேற்று விழுப்புரத்தில் 10.5 சதவீத இடஒதுக்கீடு கோரிக்கையை முன்வைத்து அன்புமணி தரப்பு பாமகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் அக்கட்சியின் எம்எல்ஏக்களும், அன்புமணியின் ஆதரவாளர்களுமான சிவக்குமார் (மயிலம்), வெங்கடேஷ்வரன் (தர்மபுரி), சதாசிவம் (மேட்டூர்) ஆகியோரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து உடனடியாக நீக்கி ராமதாஸ் உத்தரவிட்டார். இதேபோல் வழக்கறிஞர் பாலும் தடாலடியாக நீக்கப்பட்டுள்ளார். இதுகுறித்த அறிவிப்பை அக்கட்சியின் தலைமை நிலைய செயலாளர் அன்பழகன் வெளியிட்டார்.

3 பேரின் நீக்கத்துக்கான காரணமாக கட்சியின் நிறுவனரும், தலைவருமான ராமதாஸ் அனுமதியோ, உத்தரவோ இல்லாமல் எந்தவொரு முடிவையும் சட்டமன்ற உறுப்பினரோ, மற்றவர்களோ தன்னிச்சையாக செய்வது கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க முடியாது என கூறப்பட்டுள்ளது. ராமதாசின் இந்த அதிரடி நடவடிக்கையால் விழுப்புரம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அன்புமணி ஆதரவு 2ம் மட்ட தலைவர்களும், நிர்வாகிகளும் தற்போது கதிகலக்கத்தில் உள்ளனர். அடுத்ததாக அவர்களையும் மாவட்டம், நகரம், ஒன்றியம் வாரியாக கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்புகளில் இருந்து நீக்கி உத்தரவு வெளியாகலாம் என ராமதாஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ராமதாசின் இந்த தொடர் நடவடிக்கைகள் மூலம் பாமகவை முழுமையாக சாகும் வரையில் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் உறுதியாக இருப்பது தெளிவாகி உள்ளது. குடும்ப விவகாரத்தை கட்சிக்குள் கலக்காமல் தனியாக கட்சி பிரச்னைகளை முன்னெடுத்து செல்வதன்மூலம் அவருக்கான ஆதரவும் படிப்படியாக அதிகரித்தபடியே உள்ளது. இதனால் வரவுள்ள பொதுத்தேர்தலில் பாமகவுடன் கூட்டணி பேசுவதற்கு ராமதாசை பிறகட்சிகளின் தலைவர்கள் சந்திக்கவே வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

தலைமை நிலைய செயலாளர் எங்களை நீக்க முடியாது சிவக்குமார் எம்எல்ஏ பேட்டி:

பாமகவில் இருந்து நீக்கப்பட்ட மயிலம் எம்எல்ஏ சிவக்குமார் கூறுகையில், கட்சியில் இருந்து எங்களை நீக்கும் அதிகாரம் அன்புமணிக்கு மட்டுமே உள்ளது. ஆனால் தலைமை நிலைய செயலாளருக்கு எங்களை நீக்குவதற்கான அதிகாரம் இல்லை. அவரை அப்பதவியில் இருந்து ஏற்கனவே எங்கள் தலைவர் அன்புமணி நீக்கி புதிய நபரை போட்டுவிட்டார். ராமதாஸ் அல்லது அன்புமணி மட்டுமே நேரடியாக எங்களை நீக்கலாம். ஆனால் ஒரு தலைமைநிலைய செயலாளரால் சட்டமன்ற உறுப்பினர்களை நீக்க முடியாது. திமுக, அதிமுக என ஒவ்வொரு கட்சிகளில் வெவ்வேறு நடைமுறை பின்பற்றப்படுகிறது. எங்களை நீக்கும் தகுதி அன்பழகனுக்கு இல்லை. அவர் எந்த கட்சியிலிருந்து வந்தார், எங்கிருந்தார் என்பதெல்லாம் எங்களுக்கு தெரியும். சென்னையில் நாளை தலைவர் அன்புமணியை சந்திக்க பேச இருக்கிறோம். அதன்பிறகு எங்களது நிலைப்பாட்டை முறைப்படி தெரிவிப்போம்

# சிலை கடத்தல் வழக்கு: ஊடகங்களிடம் பேசமாட்டேன் பாஸ்போர்ட்டை ஒப்படைக்க பொன்.மாணிக்கவேல் ஒப்புதல்





கோயில்களில் இருந்து மாயமான, பழமையான சிலைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தமிழ்நாடு அரசு சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜியாக பொன். மாணிக்கவேல் நியமிக்கப்பட்டிருந்தார். அப்போது சிலை கடத்தல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முக்கிய நபரை வழக்கில் இருந்து தப்பவைக்க உதவியதாக சிபிஐ அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது.

இந்நிலையில், பொன் மாணிக்கவேலின் முன் ஜாமினை ரத்து செய்யக்கோரியும் சிலை கடத்தல் வழக்கு தொடர்பாக ஊடகங்களில் பொன் மாணிக்கவேல் பேட்டி அளிப்பதால் விசாரணை தடைபடுவதாகவும் சிபிஐ தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை இன்று விசாரித்த உச்சநீதிமன்றம், பொன் மாணிக்கவேல் தனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், சிபிஐ விசாரணை தொடர்பாக ஊடகங்கள், சமூக வலைதளங்களுக்கு பேட்டி அளிக்கவும் தடை விதித்து உத்தரவிட்டது.

இதையடுத்து பாஸ்போர்ட்டை ஒப்படைக்க உச்சநீதிமன்றத்தில் பொன்.மாணிக்கவேல் ஒப்புதல் அளித்தார். பாஸ்போர்ட் காலாவதி ஆகிவிட்டதால் புதுப்பித்தபின் ஒப்படைப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். மேலும், இந்த வழக்கு குறித்து ஊடகங்களிடம் பொன். மாணிக்கவேல் பேசமாட்டார் என்றும் உச்சநீதிமன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டது. பொன்.மாணிக்கவேல் குறித்து ஊடகங்களிடம் விசாரணை அதிகாரியும் பேசக்கூடாது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேசம் தான் முதலில் என்று முழங்கிய கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க எம்பி சசிதரூருக்கு தடை: கேரள காங்கிரஸ் மூத்த தலைவர் அதிரடி

தேசம் தான் முதலில் என்று முழங்கிய சசிதரூர் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைப்பு விடுக்க முடியாது என்று கேரள காங்கிரஸ் மூத்த தலைவர் அதிரடியாக அறிவித்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், திருவனந்தபுரம் எம்பியுமான சசி தரூருக்கும், கேரள காங்கிரஸ் தலைமைக்கும் இடையே நீண்ட நாட்களாகவே பனிப்போர் நிலவி வருகிறது. முன்னதாக நெருக்கடி நிலை குறித்து முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை விமர்சித்து சசி தரூர் எழுதிய கட்டுரைக்கும் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்த மோதல், பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் 'ஆபரேஷன் சிந்தூர்' விவகாரத்தில் உச்சக்கட்டத்தை எட்டியது. பஹல்காம் தாக்குதலில் ஏற்பட்ட பாதுகாப்பு குறைபாடுகளை முன்வைத்து, சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டி மோடி அரசை கடுமையாக விமர்சிக்க காங்கிரஸ் மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் திட்டமிட்டிருந்தன. ஆனால், 'ஆபரேஷன் சிந்தூர்' தொடர்பாக அமெரிக்காவுக்குச் சென்ற அனைத்துக் கட்சிக் குழுவுக்குத் தலைமை தாங்கிய சசி தரூர், 'கட்சியைவிட தேச நலனே முதன்மையானது. தேசத்தின் பாதுகாப்புக்காக மற்ற கட்சிகளுடன் ஒத்துழைப்பது அவசியம். தேசம் முதலில் என்ற நிலைப்பாட்டை என்னுடைய கட்சியினரே துரோகமாகப் பார்க்கிறார்கள். ஆனாலும், எனது நிலைப்பாட்டில் நான் உறுதியாக நிற்பேன்' என்று கொச்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசியிருந்தார். சசி தரூரின் இந்த நிலைப்பாட்டால் கொந்தளித்த காங்கிரஸ் மூத்த தலைவர் கே.முரளீதரன் அளித்த பேட்டியில், 'தேசியப் பாதுகாப்பு தொடர்பான தனது நிலைப்பாட்டை சசி தரூர் மாற்றிக்கொள்ளும் வரை, திருவனந்தபுரத்தில் நடைபெறும் எந்தவொரு கட்சி நிகழ்ச்சிகளுக்கும் அவர் அழைக்கப்பட மாட்டார்.

அவர் எங்களோடு இல்லை. எனவே, அவர் நிகழ்ச்சியைப் புறக்கணிக்கிறார் என்ற பேச்சுக்கே இடமில்லை. காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினராக இருக்கும் அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை தேசியத் தலைமை முடிவு செய்யும்' என்று அதிரடியாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. ஏற்கனவே 'கேரளாவின் அடுத்த முதல்வர் வேட்பாளர் சசி தரூர்தான்' என்று சசிதரூர் ஆதரவாளர்கள் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தி வெளியிட்டனர்.

இதுகுறித்து மூத்த தலைவர் கே.முரளீதரன் அப்போது கூறுகையில், 'முதலில் அவர் (சசிதரூர்) எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதை முடிவு செய்யட்டும். காங்கிரஸ் கட்சியில் இருப்பது அவருக்கு கட்டுப்பாடு இருப்பதாக உணர்ந்தால், அவர் வேறு அரசியல் பாதையைத் தேர்வு செய்துகொள்ளலாம்' என்றார் .(ஐ)

# மோடி, அமித்ஷா, நட்டாவுடன் யோகி 3 மணி நேரம் பேசியது என்ன?: உத்தரபிரதேச அரசியலில் பரபரப்பு



மோடி, அமித் ஷா, நட்டாவுடன் முதல்வர் யோகி 3 மணி நேரம் பேசியதால் உத்தரபிரதேச அரசியலில் அமைச்சரவை மாற்றம் உள்ளிட்ட திருப்பங்கள் நடக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் பாஜக பின்னடைவைச் சந்தித்தது. கட்சியின் முக்கிய வாக்கு வங்கிகளான ஓபிசி மற்றும் தலித் வாக்குகளின் சரிவு, கட்சிக்குள் பெரும் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம், முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் தனது பிற்படுத்தப்பட்டோர், தலித், சிறுபான்மையினர் கூட்டணியை வலுப்படுத்தி வருகிறார்.

இதுமட்டுமின்றி, தற்போது அமைச்சர்களாக இருக்கும் நந்தகோபால் நந்தி, சஞ்சய் நிஷாத் போன்றோர் அதிகாரிகளின் ஆதிக்கம் குறித்து வெளிப்படையாகவே தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து வருகின்றனர். கூட்டணிக் கட்சியான அனுப்பிரியா பட்டேலின் கட்சியும் அதிருப்தியும் முதல்வர் யோகி ஆதித்யநாத் அரசுக்குத் தலைவலியாக மாறியுள்ளது. இந்தச் சூழலில், 2027 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள புதிய மாநிலத் தலைவரை நியமித்து, கட்சியைப் புனரமைக்க வேண்டிய கட்டாயத்தில் பாஜகவின் தேசியத் தலைமை உள்ளது. இந்தச் சூழ்நிலையில், முதல்வர் யோகி ஆதித்யநாத் நேற்று திடீரென டெல்லிக்கு சென்று பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா ஆகியோரை அடுத்தடுத்து சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு சுமார் மூன்று மணி நேரம் நீடித்தது. வரும் அக்டோபரில் திறக்கப்பட உள்ள ஜேவர் விமான நிலையத் திறப்பு விழாவிற்கு பிரதமரை அழைப்பதற்கான சந்திப்பு என்று கூறப்பட்டாலும், இதன் பின்னணியில் பல முக்கிய அரசியல் காரணங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. இந்த ஆலோசனையின் போது, புதிய மாநிலத் தலைவர் நியமனம், அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பெரிய மாற்றங்கள், சில அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு மற்றும் நிர்வாக ரீதியான மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த சந்திப்புகளுக்குப் பிறகு உத்தரபிரதேச அரசியலில் மாற்றங்கள் உறுதியாக இருந்தாலும் அது எப்போது நடக்கும் என்பது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



# மேதினியின் தேவதைகள்!

குளிர்கால வெப்பநிலை -13 முதல் -22 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கும் வடக்கு ஐரோப்பாவில், பனியால் மூடப்பட்டிருக்கும் பழங்கால பைன் காடுகளில் துருவ கலைமான்கள் சுற்றித் திரியும் அற்புதமான காட்சியை டிஸ்கவரி சேனலில் பார்த்திருப்பீர்கள். ஆனால், ஆர்க்டிக் ஸ்வீடன், நார்வே, பின்லாந்து, ரஷ்யாவில் உள்ள கோலா தீபகற்பத்தைச் சேர்ந்த சாமி பழங்குடி மக்களுக்கும் இதுதான் வீடு. உண்மையில், ஐரோப்பாவில் எஞ்சியிருக்கும் ஒரே பழங்குடியினரான சாமி மக்களை நீங்கள் உறைந்த படங்களில் அவர்களின் சமூகத்தின் பிரதிநிதித்துவத்திலிருந்து அடையாளம் காணலாம்.

'ஃப்ரோசன்' என்கிற ஆங்கிலத் திரைப்படம் பார்த்திருப்பீர்கள். படத்தின் நாயகிகளான எல்சாவும் அண்ணாவும் தங்கள் தாயார் நார்துல்ட்ரா மக்களில் ஒருவர் என்பதை அறிந்துகொள்ள மந்திரித்த காட்டில் உள்ளே தேடிச் செல்வார்கள். அந்தப் படத்தில் சித்தரிக்கப்பட்ட பழங்குடியினர், வடக்கு நோர்வேயின் சாமி பழங்குடி மக்களை அடிப்படையாகக் கொண்டவர்கள். இவர்களின் மொத்த மக்கள் தொகை 50,000 - 200,000 வரை இருக்கும்.

சாமி பழங்குடி துருவக் கலைமான் மேய்ப்பிற்கு மிகவும் பெயர் பெற்றவர்கள். துருவக் கலைமான் இறைச்சி உணவாகப் பயன்படுகிறது. தோல், ரோமங்கள், காலணிகள் ஆடைகள் தயாரிக்கப் பயன்படுகின்றன. மேலும் கொம்புகள், எலும்புகள் மூலம் கருவிகள், அலங்காரப் பொருட்கள் செய்யப்படுகின்றன. சாமிகள் திறமையான மீனவர்களாகவும் ஆடு மேய்ப்பவர்களாகவும் திகழ்கிறார்கள்.

பாரம்பரிய சாமி பழங்குடி பல தெய்வ வழிபாட்டைக் கடைப்பிடிக்கிறார்கள் . இருப்பினும் சாமி ஒரு பெரிய நிலத்தை உள்ளடக்கியதால், பல்வேறு பழங்குடியினரிடையே நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களை அனுமதித்துள்ளது. அதில் ஆதிக்கம் செலுத்தும் மதங்கள் லூதரனிசம், கிழக்கு ஆர்த்தடாக்ஸ்.

சாமி பழங்குடி பெண்கள் மஞ்சள் முடி, நீலக்கண்களுடன் ஐரோப்பிய தோற்றத்தில் இருந்து வேறுபடுகிறார்கள். அவர்களின் பாரம்பரிய உடைகள், காக்டி என்று அழைக்கப்படுகின்றன. விருந்துகள், திருவிழாக்கள், திருமணங்கள், ஞானஸ்நானம், இறுதிச் சடங்குகள் பலவற்றில் இவை அணியப்படுகின்றன. சிலர் பாரம்பரிய உடைகளை அன்றாட உடைகளாக அணியத் தேர்வு செய்கிறார்கள். பெண்களின் காக்டி ஆண்களைவிட நீளமானது. அவை முதலில் துருவக் கலைமான் தோல்கள், ரோமங்களிலிருந்து தயாரிக்கப்பட்டன. காலப்போக்கில், ரோமங்கள் பருத்தி, கம்பளி, பட்டு, வெல்வெட் ஆகியவற்றால் மாற்றப்பட்டன. கையால் செய்யப்பட்ட ஆடைகள் வெவ்வேறு வடிவமைப்புகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆடையின் வண்ணங்கள், வடிவங்கள் மற்றும் அலங்காரங்கள் ஒரு நபரின் புவியியல் தோற்றத்தைக் குறிக்கும். பாரம்பரிய சாமி பெண்கள் உடுத்தும் ஆடைகளின் நிறங்கள் சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள். ஆர்க்டிக் வட்டத்தில் தொப்பிகள் குளிர்ச்சியிலிருந்து பாதுகாத்தன. ஆண்களும் பெண்களும் பலவிதமான தட்டையான தொப்பிகள் முதல் கூர்மையான தொப்பிகள் வரை அணிந்தனர்.



சாமி பழங்குடியைச் சேர்ந்தவரின் காலணி துருவக் கலைமான் தோலில் இருந்து தயாரிக்கப்படுகிறது. சாமி பழங்குடி பெண்கள் வண்ணமயமான உடைகள் அணிபவர்கள், பாரம்பரிய கைவினைப் பொருட்கள் செய்பவர்கள், துருவக் கலைமான் மேய்ப்பாளர்கள் என்று மட்டுமே பலர் நினைக்கிறார்கள். ஆனால், ராப் இசை, நவீன கட்டிடக்கலை, அதிநவீன வடிவமைப்புகள் வரை அனைத்திலும் சாமி பெண்களின் பாரம்பரியம் உயிருடன் இருக்கிறது. நவீன சாமி பழங்குடி பெண்கள் ஒரு விருது பெற்ற திரைப்படத் தயாரிப்பாளராகவும், துருவக் கலைமான் மேய்ப்பவராகவும் இருக்கலாம். ஆனால், அவர்கள் இருவரும் இயற்கையுடன் ஆழமான உறவுடனே வாழ்கிறார்கள்.

சாமி கலாசாரம் பல சிறப்பியல்பு வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளது. சாமி கைவினைப் பொருட்கள் அவற்றில் ஒன்று. நோர்வேயில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட துருவக் கலைமான்கள் உள்ளன. துருவக் கலைமான் எப்போதும் சாமி கலாசாரத்தின் மையப் பகுதியாக இருந்து வருகிறது. துருவக் கலைமான்களில் பயன்படுத்தப்படாத எந்தப் பகுதியும் இல்லை. சமையலுக்கு இறைச்சி, ஆடைகளுக்கும் காலணிகளுக்கும் ரோமமும் தோலும் கொம்புகள் கருவிகள் முதல் அழகான கலைவேலைப்பாடு வரை பயன்படுகின்றன. சாமியின் வாழ்க்கை முறைக்கு துருவக் கலைமான் மிகவும் முக்கியமானது. பலர் துருவக் கலைமான்களை எவ்வாறு பராமரிப்பது என்பதை அறிய ஒரு சிறப்புப் பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறார்கள். கணிதம், ஆங்கில வகுப்புகள் போல, துருவக் கலைமான் மந்தைகளை எவ்வாறு பராமரிப்பது என்று அவர்களுக்குக் கற்பிக்கும் வகுப்புகள் உள்ளன.

சாமி பழங்குடியினர் 'அரை நாடோடிகள்', அதாவது அவர்கள் ஆண்டு முழுவதும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. சாமி மேய்ப்பர்கள் பருவக் காலங்களில் தங்கள் துருவக் கலைமான்களுடன் இடம்பெயர்ந்து, குளிர்காலத்திற்காக மலைகளுக்குச் சென்று, கோடையில் சமூகத்துடன் திரும்பி வருகிறார்கள். பயணத்தில், சாமி மேய்ப்பர்கள் லாவ்வோ எனப்படும் பாரம்பரியக் கூடாரத்தில் முகாமிடுவார்கள்.

உலகின் மற்ற பகுதிகளைவிட ஆர்க்டிக் இரண்டு மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருகிறது. இது அதன் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பிற்கு ஆபத்து விளைவிக்கிறது. அதிகரித்து வரும் கணிக்க முடியாத தீவிர வானிலை சாமி பழங்குடிகளின் வாழ்வாதாரத்தையும், பழங்குடியின மக்களாகிய அவர்களின் உரிமைகளையும் பாதிக்கிறது. காலநிலை மாற்றத்தினால் பனிப்பொழிவு குறைந்து மழையாக அடிக்கடி விழுகிறது. பின்னர் அது உறைந்து பனிக்கட்டி அடுக்கை உருவாக்குகிறது. துருவக் கலைமான்களால் பனிக்கட்டியை உடைக்க முடியவில்லை. பனிக்கட்டி வழியாக கீழே உள்ள நீலப்பச்சைப்பாசி கிடைக்காமல் பட்டினி கிடக்கின்றன. 2013 இல் மட்டும் 61 ஆயிரம் துருவக் கலைமான்கள் இறந்தன.

சாமி பழங்குடி பெண்கள் துருவக் கலைமான் மேய்ப்பர்களாக துருவ கலைமான்களுக்காகவும் தங்கள் மூதாதையர் நிலங்களுக்கான உரிமைக்காகவும் போராடுகிறார்கள். ஆனால், புவி வெப்பமடைதல், தொழில்மயமாக்கல், காலனித்துவம், ஸ்காண்டிநேவிய அரசாங்கங்களால் கலாசார அழித்தல் ஆகியவற்றின் காரணமாக, இவர்களின் கலாசாரம் அழியும் நிலையில் இருக்கிறது. சாமி பழங்குடியின் உறுதியான பெண் தலைவர்கள்தாம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தங்கள் சமூகங்களின் நிலம், பாரம்பரிய உரிமைகளுக்காகப் போராடுகின்றனர்.

சிறிய கிராமங்களின் எல்லைகளுக்கு அப்பால் தங்கள் குரலை வெளிப்படையாக எடுத்துச் செல்லும் சாமி பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும் உலக அரங்கில் ஒவ்வோர் ஆண்டும் ஐ.நாவின் காலநிலை மாற்றம் குறித்த பேச்சுகளில் பழங்குடியின பிரதிநிதிகளாக சாமி பழங்குடி பெண்கள் குழுவில் இணைகிறார்கள். தன் ஒன்பது வயதில் துருவக் கலைமான்களைச் சேகரித்தல், குறியிடுதல், தடுப்பூசி போடுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்ட டீனா சனிலா-ஐகியோ, பின்லாந்தின் சாமி நாடாளுமன்றத்தின் முதல் பெண் தலைவராக ஆனார்.

ஆர்க்டிக் வட்டத்தில் உள்ள ஒரு முக்கியமான துருவக் கலைமான் மேய்க்கும் பகுதியில் வர இருந்த பிரிட்டன் நிறுவனத்தின் இரும்புத்தாது சுரங்கத்திற்கு எதிராக சாமி பெண்கள் போராட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது .

காலநிலை மாற்றம், இனவெறி, வன்முறை ஆகியவற்றால் அச்சுறுத்தப்பட்ட பழங்குடி சமூகத்தை ஆராயும் 'ஸ்டோலன்' என்கிற சிறந்த நாவலில், சாமி பழங்குடியைச் சேர்ந்த எல்சா துருவக் கலைமான்களைப் பாதுகாப்பதிலும், அதற்காக காவல்துறைக்கு கடிதங்கள் எழுதுவதிலும், அறிக்கைகள் தாக்கல் செய்வதிலும், தன்னை அர்ப்பணித்துக்கொள்வதாக அமைந்திருக்கிறது.

சாமி பழங்குடியின் உரிமைக்காகப் போராடும் பெண்களில் பலர், தங்கள் பூர்வீக நிலத்தில் பணிபுரியும் உரிமைக்காகப் போராடுகிறார்கள், அடுத்த தலைமுறைக்கு தங்கள் பாரம்பரியத்தை விதைக்க ஆர்வத்துடன் உழைக்கிறார்கள்.

மாலைக்கதிர்
Maalaikkathir



# இந்தோனேசியாவில் சொகுசு கப்பலில் நேரிட்ட தீ விபத்து: 5 பேர் உயிரிழந்த நிலையில் 280—க்கு மேற்பட்டோர் தப்பினர்



இந்தோனேசியாவில் சொகுசுக் கப்பலில் நேரிட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 284 பயணிகள் இந்த விபத்தில் இருந்து தப்பியதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. கேம் பார்சிலோனா என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் இந்தோனேசியாவின் தல ஒரு தீவுகளில் இருந்து கிளம்பி வடக்கு சூழ திசையை உள்ள மனோதாவை நோக்கி சென்று கொண்டு இருந்த. இதில் கப்பல் ஊழியர்கள், பயணிகள் உட்பட 280க்கு மேற்பட்டோர் பயணம் செய்ததாக தெரிகிறது. தலாட் தீவு அருகே சென்ற பொது கப்பலில் தீடிர் என்ன தீ பற்றியது. தீ கொழுந்து விட்டு எரிந்ததால் அச்சம் அடைந்த பல பயணிகள் உயிரை காப்பாற்றி கொள்ள கடலில் குதித்தனர்.

உடனடியாக கடற்கரை கப்பல்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணிகளும் மீட்பு பணிகளும் துரிக்கப்படுத்தப்பட்டன. உள்ளுர் மீனவர்களும் கடலில் நீந்தி சென்று பயணிகள் மீட்டு கரைக்கு அழைத்து சென்றனர். லைப் ஜாக்கெட் உதவியுடன் ஏராளமானோர் நீந்தி கரைக்கு சென்றனர். கரைவந்து சேர்ந்தவர்கள் அதிர்ச்சியுடன் மீட்பு பணிகளை பார்த்து கொண்டு இருந்தனர். இந்த விபத்தில் 5 பேர் உயிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியானது. தீவிபத்து காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட இந்தோனேசியாவில் படகுகள், கப்பல்கள், விபத்தில் சிக்குவது தொடர் கதையாக உள்ளது.

## ஜப்பான் நாடாளுமன்ற மேலவை தேர்தல் பிரதமர் இஷிபா ஷிகெருவுக்கு நெருக்கடி



ஜப்பான் நாடாளுமன்ற தேர்தல் நேற்று நடந்தது.இதில் ஆளும் லிபரல் ஜனநாயக கட்சி தோல்வி அடைந்தால் பிரதமர் இஷிபா ஷிகெருவுக்கு நெருக்கடி ஏற்படும் என தெரிகிறது. ஜப்பானில் லிபரல் ஜனநாயக கட்சி ஆட்சி(எல்டிபி) நடக்கிறது. பிரதமராக இஷிபா ஷிகெரு இருந்து வருகிறார். ஜப்பானின் நாடாளுமன்றமான டயட்டில் உள்ள இரு அவைகளிலும் அதிகாரம் குறைந்த மேலவையின் 248 இடங்களில் பாதி இடங்களுக்கான தேர்தல் நேற்று நடந்தது.

பிரதமர் இஷிபா ஷிகெரு இத்தேர்தலில் 125 இடங்களில் வெற்றி என்ற எளிய பெரும்பான்மை கிடைக்கும் என எதிர்பார்க்கிறார். எல்டிபி மற்றும் அதன் கூட்டணி கட்சியான கோமெய்டோவுக்கும் நாடாளுமன்ற மேலவையில் 75 இடங்கள் உள்ளன. இதனால் கூடுதலாக 50 இடங்களை ஆளும் கட்சி கைப்பற்ற வேண்டும்.

விலைவாசி உயர்வு, வருமானம் குறைவு மற்றும் சமூக பாதுகாப்பு சுமை மற்றும் பண பற்றாக்குறை ஆகிய பிரச்னைகளால் வாக்காளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த தேர்தலில் ஆளும் கட்சிக்கு மோசமான தோல்வி ஏற்படும் ஊடகங்கள் கணித்துள்ளன. இதில் தோல்வி ஏற்பட்டால் இஷிபா பதவி விலக நேரிடும் அல்லது கூட்டணியில் இன்னொரு கட்சியை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை எழும் என்று கூறப்படுகிறது. (ஐ)


## அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்ட ஏ.ஐ. வீடியோ ஒபாமாவை கைது செய்வது போல காட்சியால் சர்ச்சை!!




அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது போல டிரம்ப் வெளியிட்டுள்ள ஏ.ஐ. வீடியோ சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது சமூக வலைத்தள பக்கத்தில் ஏ.ஐ. வீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில் 'சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் யாரும் இல்லை' என்ற தலைப்பில் டீப்ஃபேக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அந்த வீடியோவில், சட்டத்திற்கு மேலானவர்கள் யாரும் இல்லை என்ற வாசகத்தை அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா, ஜோ பைடன் உள்பட பல்வேறு ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் என ஒவ்வொன்றாகக் கூறுகின்றனர்.

அதன் பின்னர், வெள்ளை மாளைகையின் ஓவல் அலுவலகத்திற்குள், அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரிகள் ஒபாமா கைவிலங்கு செய்யப்பட்டு கைது செய்யப்படுகிறார். சில நொடிகளுக்குப் பிறகு ஆரஞ்ச் நிற ஜம்ப்சூட் அணிந்து சிறையில் அடைப்பது போல சித்தரிக்கப்பட்டுள்ளது. அதிபர் ஒருவர், இது போன்ற வீடியோவை அதிகாரப்பூர்வ பக்கத்தில் வெளியிட்டிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஒபாமா பதவி காலத்தில் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசியலுக்காக உளவுத்துறை பயன்படுத்தப்பட்டதாக அந்நாட்டின் தேசிய புலனாய்வு இயக்குனர் குற்றச்சாட்டியுள்ள நிலையில், இந்த விடியோவை டிரம்ப் வெளியிட்டுள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ஐ)

## வீட்டின் மேற்கூரையில் பாய்ந்த கார்– 6 பேர் படுகாயம்



ஜெர்மனியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது மோதி, தரையிலிருந்து 3 மீ உயரத்தில் பறந்து சாலையோரம் இருந்த வீட்டின் மேற்கூரையில் பாய்ந்த காரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர். இது குறித்து போலீஸ் விசாரணை நடத்தி வருகிறது. (ஐ)

# GT4 யூரோபியன் சீரிஸ் கார் ரேஸில் அஜித்குமாரின் கார் விபத்தில் சிக்கியது

இத்தாலியில்நடைபெற்று வரும்**GT4** யூரோபியன்சீரிஸ் கார் ரேஸில் அஜித்குமாரின் கார் விபத்தில் சிக்கியது. நல்வாய்ப்பாக காயமின்றி தப்பினார். வளைவில் வேகமாக திரும்பும்போது, சர்க்யூட்டின்நடுவில்பழுதாகி நின்றுகொண்டிருந்தகார்மீது அஜித்தின் கார் மோதியது. கார் மீது மோதாமல் இருக்க முயன்றபோதும் கட்டுப்படுத்த முடியவில்லை. (ஐ)



## கொடிச்சீலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டு வண்டில் மூலம் நல்லூரில் இருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இம்மாதம் 29ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊசிமூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மேற்படி இளைஞர் கடந்த 5 வருடங்களாக ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மயக்கமடைந்த நிலையில் வீட்டில் காணப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, நண்பர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## வாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மற்றைய நபரின் சடலத்தைத் தேடும் நடவடிக்கை தொடர்கின்றது.

29 மற்றும் 30 வயதுடைய இருவரும் பனஹடுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இருவரும் நீரில் மூழ்கியதை அவதானித்த நபர் ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மற்றும் இலங்கை இராணுவத்தின் உயிர்காக்கும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இதன்போது ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மற்றைய நபரின் சடலத்தைக் கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

## இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேகாலை, கலிகமுவ பகுதியில் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

வெரகொடவில் இருந்து கேகாலை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸ/ம் கேகாலையில் இருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் 25 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் கேகாலை மற்றும் வரக்காப்பொல வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிலந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின்போது, "உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டால்கூட பரவாயில்லை" - எனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இக்கூற்று அருட்தந்தை ஜூட்டின் தனிப்பட்ட கருத்தாகும் சிரில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையும்,உலகளாவிய திருச்சபையும்மரணதண்டனையை ஏற்றுக்கொள்வதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நிலந்த ஜயவர்தன தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, சி.ஐ.டியின் இயக்குநராக ஷானி அபயசேகரவையும்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனிவிரட்னவையும் நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பேராயர் கோரிக்கை விடுத்தார் என வெளியாகும் தகவல்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

# ஜனாதிபதிக்கும் ஐ.எம்.எப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு



சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு இடையே இன்று (21) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை எட்டுபட்டுள்ளதால், அந்த வலுவான அடித்தளத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதன் மூலமும் புதிய பொருளாதார வாய்ப்புகளைப் பெறுவதன் மூலமும் இலங்கையை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் திட்டம் துரிதப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும்தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்கு விளக்கிய ஜனாதிபதி, அந்த சவால்களுக்கு மத்தியிலும் 2026 வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் நினைவு கூர்ந்தார்.

நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சுங்கவரிச் சலுகைகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பேணுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்து கிடைக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இதுவரை இலங்கைக்கு அளித்த ஆதரவிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாட்டுக்குக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பயன்களையும் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக வலியுறுத்தினார்.

இலங்கையை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட உறுதிப்பாட்டைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் இலங்கையை உலகளவில் முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேவையான ஆதரவை வழங்கவும் உடன்பாடு தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி இவான் பாபர்ஜயோஜியோ(றுஎயளீயியபநழசபழைர), சந்தேஷ் துங்கானா(ளுயனெநளா னுூரபெயயெ) , உர்சுலா விரியாடினாடா(ருசளரடய றுசையைனயைவெய), தினார் பிரிஹார்டினி( னுயையெசூசளாயசனைநை), சம்சன் குவாலிங்கனா( ளுயஅளழுெ முறயடைபெயயெ), ஓஸ்லெம் அய்டின்(முணடநஅ யுலனைெ ) மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிட பிரதிநிதிகளான மார்த்தா வோல்டெமிகேல்(ஆயசவாய றுழடனநஅiஉாயநட) மற்றும் மானவி அபேவிக்ரம ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க,இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரஸ்ஸல் அப்போன்சு, ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த /ஹலங்கமுவ, நிதிக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.கே.சி. சேனநாயக்க, இலங்கை மத்திய வங்கி சிரேஸ்ட பிரதி ஆளுநர் கே.எம்.ஏ.என். தவுலகல, நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் பி.கே.ஜி. ஹரிச்சந்திர, நிதிக் கொள்கை சபையின் செயலாளர் கலாநிதி சி. அமரசேகர, பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் ஜே.எஸ். ஜெகஜீவன் ஆகியோர் பங்கேற்றனர்.

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் இன்னமும் உரிய மாற்றம் இடம்பெறவில்லை என்றே நானும் கருதுகின்றேன். பொருட்களின் விலை அதிகமாக உள்ளது. மக்களுக்கு வாழ்வதற்கு கஷ்டமாக உள்ளது.

அதேவேளை, கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் உரிய மதிப்பாய்வின் பின்னரே அது பற்றி கருத்து வெளியிட முடியும்." - என்றார்.

# அரசாங்கத்தின் வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 21

2025 ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையிலான 5 மாத காலப்பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் 1,942.36 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் கிடைக்கப்பெற்ற அரசாங்கத்தின் 1,619.23 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடும்போது இது 19.95மூ வீதம் அதிகமாகும். குறித்த காலப்பகுதியில் அரசாங்க வரி வருமானம் 1,491.25 பில்லியன் ரூபாவில் இருந்து 1,802.48 பில்லியன் ரூபா வரையில் 20.87% அதிகரித்ததே இதற்கான முக்கியக் காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால்பந்து விளையாடிய வேளையில் பரிதாபமாக பறிபோன உயிர்!

கொழும்பு, ஜூலை 21

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கால்பந்து விளையாடிக்கொண்டிருந்த இளைஞன் மீது கோல் கம்பம் வீழ்த்ததில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

29 வயதுடை யுவராஜ் செபஸ்தியாம்பிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைவிடப்பட்டிருந்த குழந்தையை தாய் போல் பராமரித்து வரும் தாதியர்கள்!

கொழும்பு, ஜூலை 21

குருநாகல்பிரதேசத்தில்வயல்வெளியில்வீசிவிடப்பட்டிருந்த குழந்தை தற்போது மருத்துமனையில் தாதியர்களின் கவனிப்பில் உள்ளது.

பரகஹதெனிய சிங்கபுர வீதி வயல்வெளியில் கடந்த வாரம் பெற்றெடுத்த பிஞ்சுக் குழந்தையை ஒட்டுத் துணி கூட இல்லாமல் ஈவிரக்கமின்றி தாய் வீசி விட்டுச் சென்ற நிலையில் , பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய குழந்தை மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் குழந்தையை தத்தெடுபதற்காக உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போட்டிப் போட்ட வண்ணம் இருப்பதாகவும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களிடமிருந்தும் அழைப்புக்கள் வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாயால் தூக்கி வீசப்பட்ட பிஞ்சுக் குழந்தையை தற்போது தாதியர்கள் தாயைப் போல் பராமரித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2025 வெளியிடப்பெற்றது.